| | |
|---|---|
| TNVR13000533<br>2018 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை—திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,<br>சார்பு நீதிபதி,<br>2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் நாள் செவ்வாய்க்கிழமை<br>I.A.No.9/2023 in O.S.No.188/2018 |

வைஷ்ணவி ... மனுதாரர்/வாதி

—எதிரிடை—

1. பிரபாகரன்
2. வளர்மதிதேவி
3. கமலம்மாள்(இறப்பு)
4. வட்டாட்சியர், காரியாபட்டி
5. கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை
6. ஜி. ஜெயசீலன்
7. ஜனனி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 08.07.2024 ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டபோது, மனுதாரர்/வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.சி.ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 7 எதிர்மனுதாரர்கள் / 1,2, 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பார்த்தசாரதி அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 4,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு. வி.எஸ்.ராம்குமார் அவர்கள் ஆஜராகியிருந்தாலும், இம்மனுவிற்கு மறுப்புரை இல்லை என்று மனுவில் மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 6 ம் எதிர்மனுதாரர் / 6 ம் பிரதிவாதி அசல் வழக்கிலேயே தோன்றாத் தரப்பினராகியுள்ள நிலையிலும், இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

உத்தரவு

மனுவில் கண்டபடி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி CPC Order 6 Rule 16, 17 and Section 151 CPC—ன் படி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** <u>மனுவின் சுருக்கம்:</u>

மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். 1ம் பிரதிவாதியின் மகளான ஜனனி என்பவருக்கு வழக்கு நிலுவையில் உள்ளபோது 20.05.2019ம் தேதி தாவாச் சொத்தை இனாம் சாசனம் மோசடியாக எழுதியுள்ளதில் மேற்படி ஜனனியையும் தாவா வழக்கில் கட்சிக்காரராக சேர்க்க மனுக் கொடுத்ததில், அதுவும் இ.ம.எண்.5/2019ல் கடந்த 06.09.2021ல் அனுமதிக்கப்பட்டுள்ளதில், அவரையும் கட்சிக்காரராக சேர்த்து, மனு விபரத்தில் கண்ட விபரப்படி பிராதில் சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3.** <u>1,2,7 எதிர்மனுதாரர்கள் / 1,2,7 பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில், கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றும் உண்மைக்கு மாறானவை என்றும் ஆட்சேபிக்கப்படுகின்றன. மனுதாரர்/வாதி வகையில் தாக்கல் செய்த வழக்கிற்கு இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் விரிவான எதிர்வழக்குரையுடன் இணைந்த எதிர்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் அபிடவிட்டில் ஏதோ 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் மகளான ஜனனி என்பவருக்கு வழக்கு நிலுவையில் உள்ளபோது 20.05.2019ம் தேதி தாவாச் சொத்தை இனாம் சாசனம் மோசடியாக எழுதியுள்ளதாக தெரிவித்திருப்பது ஆட்சேபிக்கப்படுகிறது. தாவாச் சொத்து வழிவழியாக 1ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்டு, பின்னர் அவரது மனைவி உரிமையடைந்து அவர் சாவதானத்தைக் கருதி, 1ம் எதிர்மனுதாரரின் மகள் 7ம் எதிர்மனுதாரர் பெயருக்கு ஆவணம் எழுதி வைத்துள்ளார். மேற்படி ஆவணமும் பதிவு சட்ட சரத்துக்களின்படி பதிவு செய்யப்பட்ட சட்டப்படி ஏற்புடைய ஆவணமாகும். மனுதாரர் தரப்பில், வழக்கை வீண் காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 7ம் எதிர்மனுதாரரை சேர்க்க அனுமதித்து கடந்த 06.09.2021ம் தேதியிலேயே நீதிமன்ற உத்தரவு பிறப்பித்திருந்தும், மிகுந்த காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் மனுவில் யாதொரு மெரிட்சும் இல்லை. எனவே இம்மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்

தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

5. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து உரிமை விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் ஆவணங்கள் இல்லா நிலையது என விளம்புகைப் பரிகாரங்கள் கோரி மனுதாரர் / வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்கோரிக்கையுடன் கூடிய எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்படாமல், வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படாத நிலையில் உள்ளதாகவே தெரிய வருகிறது. இந்நிலையில், 1ம் பிரதிவாதியின் மகளான ஜனனி என்பவருக்கு வழக்கு நிலுவையில் உள்ளபோது 20.05.2019ம் தேதி தாவாச் சொத்தை இனாம் சாசனம் மோசடியாக எழுதியுள்ளதில் மேற்படி ஜனனியையும் தாவா வழக்கில் கட்சிக்காரராக சேர்க்க இ.ம.எண்.5/2019 என்ற எண்ணில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதில், அவரையும் கட்சிக்காரராக சேர்த்து, மனு விபரத்தில் கண்ட விபரப்படி பிராதில் சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்றும் மனுதாரர்/ வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. மனுதாரரின் மனுவினை ஆட்சேபணை செய்து, 1, 2, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும், 1, 2, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பிலேயே வழக்குச் சொத்தைப் பொறுத்து 7ம் எதிர்மனுதாரரான ஜனனி பெயருக்கு ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேலும், மேற்படி ஜனனியை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.5/2019 மனு கடந்த 06.09.2021ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஷை சங்கதிகளை பிராதில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது.

7. மேற்கண்ட சூழ்நிலையில், வாதி தரப்பில் மனுவில் சொல்லியுள்ள சீர்திருத்த விபரங்கள் இ.ம.எண்.5/2019 மனுவின் உத்தரவின் மீதான தொடர்ச்சியாக அமைந்துள்ளது என்பதால் ஷை திருத்தங்களால் இந்த வழக்கின் தன்மையோ, வழக்கு

மூலமோ மாறப்போவதில்லை என இந்நீதிமன்றம் காண்கிறது. இ.ம.எண்.5/2019 மனுவின் உத்தரவிற்கு பிறகு நோட்ஸ் பேப்பரில் சீர்திருத்த மனுத் தாக்கல் செய்ய சொல்லி கவனக்குறைவான சங்கதி சொல்லப்பட்டுள்ளதால், உடனடியாக இந்த மனு தாக்கல் செய்யப்படாமல் சற்று காலதாமதமாகியுள்ளதாக இந்நீதிமன்றம் காண்கிறது. எனவே, மனுதாரர் தரப்பில் வேறு எந்தவித காலதாமதமும் ஏற்பட்டதாக தெரியவில்லை. வழக்குச் சொத்தைப் பொறுத்து 7 ம் எதிர்மனுதாரர் பெயரில் ஏற்பட்ட ஆவணம் குறித்து இந்த மனுவில் பரிசீலிக்கப்படப்போவதில்லை எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே, 7 ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்க்க அனுமதி அளித்ததன் தொடர்ச்சியாக consequential amendment என்ற முறையில் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர், என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2024.07.23 10:08:15 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> – இல்லை.
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2024.07.23 10:08:21 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.9/2023 in O.S.No.188/2018
உத்தரவு நாள் –23.07.2024